







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன் தினம் (23.10.2025) தஞ்சாவூர் இரயில் நிலையத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் பிற மாவட்டங்களுக்கு சரக்கு இரயில் பெட்டிகள் மூலமாக நெல் மூட்டைகள் அனுப்பும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் அர.சக்கரபாணி, கோவி.செழியன், டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## தஞ்சை மண்ணில் பொய்யை விதைத்து விவசாயிகளின் வாக்குகளை அறுவடை செய்யப் பார்க்கிறார்!

# ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ எனும் டெல்டாக்காரர் ஆட்சியில் பழனிசாமியின் பொய் ஒரு போதும் நிறைவேறாது!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!



***தஞ்சாவூர், அக். 25 -***

**தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள், ரயில் மூலமாக கொண்டு செல்லப்படும் இடத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் மாலை ஆய்வு மேற்கொண்டார். இதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்தார்**

**அப்போது அவர் ``தஞ்சை மண்ணில் பொய்யை விதைத்து, விவசாயிகளின் வாக்குகளை அறுவடை செய்ய பார்க்கிறார் எடப்பாடி பழனிசாமி. டெல்டாக்காரர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில் அது ஒருபோதும் நிறைவேறாது” என்று குறிப்பிட்டார்.**

**தஞ்சாவூர் மாவட்டம் காட்டூர் நெல் கொள்முதல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட பின்னர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் விவரம் வருமாறு:**

வடகிழக்குப் பருவமழை காரணமாக, சென்னை மற்றும் டெல்டா மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கடந்த 20-ஆம் தேதி முதல் சென்னையில் மழைத் தொடர்பான ஆய்வுப்பணிகளை மேற்கொண்டோம். அதைத் தொடர்ந்து இன்றைய தினம் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டோம். விவசாயிகளிடம் இருந்து, கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை ரயில்கள் மூலம், எடுத்துச் செல்லும் பணிகளை முதலில் ஆய்வு செய்தோம்.

தஞ்சாவூரிலிருந்து ஒரு நாளைக்கு 4 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் மூட்டைகள் கொண்டு செல்லப்படுகின்றன. அதேபோல கும்பகோணம் மற்றும் பட்டுக்கோட்டையில் இருந்து, ஒரு நாளைக்கு 2 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் மூட்டைகள் கொண்டு செல்லப்படுகின்றன. எனவே இந்த நேரத்தில் பத்திரிகை நண்பர்களுக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய அரசு, விவசாயிகளுக்கும் வேளாண் பெருங்குடி மக்களுக்கும் என்றைக்கும் துணைநிற்கும் அரசு.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, வேளாண் துறையிலும் இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. அதைப் பொறுக்க முடியாமல் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, நேற்று தஞ்சை வந்தபோது, பல தவறான, பொய்யான குற்றச்சாட்டுக்களை வழக்கம்போல கூறிச் சென்றிருக்கிறார்.

### செப்.1 –இல் திறப்பு

குறிப்பாக, நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்பாடுகள் பற்றி முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொல்லி இருக்கிறார். திறந்தவெளி கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை குடோனுக்கு எடுத்துச் செல்லாததால், புதிய நெல் மூட்டைகளை வைக்க இடமில்லை என்று கூறி இருக்கிறார்.

வழக்கமாக குறுவை சாகுபடி காலத்தில் அக்டோபர் 1-ஆம் தேதிதான் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், டெல்டா விவசாயிகளின் நிலை அறிந்து, அவர்களின் கோரிக்கையை ஏற்று, செப்டம்பர் 1-ஆம் தேதியே நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க உத்தரவிட்டுள்ளார். அதன்படி, செப்டம்பர் 1-ஆம் தேதியில் இருந்து, நேற்று வரை, சுமார் 1,825 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

### 2 லட்சம் டன் நெல்

நம்முடைய அரசு எடுத்த முயற்சியால், வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, குறுவை சாகுபடி காலத்தில், கிட்டத்தட்ட 50 நாட்களில் சுமார் 10 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு, நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதில், 8 லட்சம் மெட்ரிக் டன், அதாவது 81 சதவிகிதம் நெல் மூட்டைகள், குடோனுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. மீதமுள்ள 1 லட்சத்து 93 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் மூட்டைகளை குடோனுக்குக் கொண்டு செல்லும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இன்னும் ஒரு 10 நாட்களுக்குள்,

இந்த மீதமுள்ள பணி நிறைவடையும்.

குறிப்பாக, டெல்டாவில் தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களில் இன்னும் சுமார் 2 இலட்சம் மெட்ரிக் டன் நெல் மூட்டைகளை வைக்கும் அளவுக்கு இட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, புதிதாக கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை வைப்பதற்கு இடம் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டு என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதேபோல, நெல் கொள்முதல் நிலையங்களில் குறைவான அளவே நெல் எடை போடப்படுவதாக ஒரு குற்றச்சாட்டை கூறியிருக்கிறார். அதுவும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

### விவசாயிகளிடம் புகார் இல்லை!

தஞ்சாவூர் மாவட்டத்தில் சென்ற ஆண்டு குறுவை சாகுபடி காலத்தில், மொத்தமாகவே 200 நெல் கொள்முதல் நிலையங்கள் மட்டுமே திறக்கப்பட்டிருந்தன. ஆனால், இந்த ஆண்டு செப்டம்பர் 1 முதல் இந்த 50 நாட்களில் மட்டுமே 300 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க, நமது அரசு அனைத்து பணிகளையும் செய்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள தென்னமநாடு, ஒக்கநாடு, கீழையூர் கொள்முதல் நிலையங்களில் ஒரு நாளைக்கு 3,000 நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. ஒரத்தநாடு புதூர், திருவையாறு, விலங்குடி நெல் கொள்முதல் நிலையத்தில் ஒரு நாளைக்கு 2 ஆயிரம் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

ஆனால், 800 நெல் மூட்டைகள் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது என்று லோட்மேன் ஒருவர் சொன்னதாக எடப்பாடி பழனிசாமி கூறுகிறார். ஏதோ ஒரு குறிப்பிட்ட மையத்தில், ஏதோ ஒரு நாள் 800 மூட்டைகள் வந்தால், தமிழ்நாடு முழுக்க ஒரு நாளைக்கு 800 மூட்டைகள்தான் கொள்முதல் செய்யப்படுகின்றன என்று அர்த்தம் கிடையாது. அடுத்த நாள் அதே இடத்தில் ஆயிரம் மூட்டைகள் கூட வரும். கூடுதலாக வந்தால்

கூடுதல் மூட்டைகளை கொள்முதல் செய்வதற்கு அனைத்து வசதிகளையும் அரசு செய்து கொடுத்திருக்கிறது.

நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும், அதிகமான விற்பனை முனையம் உள்ளதாலும், நெல் கொள்முதல் என்பது பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதனால்தான் எந்த இடத்திலும் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என்று விவசாயிகள் யாரும் புகார் அளிக்கவில்லை. எதிர்க்கட்சித்தலைவர் மட்டும்தான் இத்தகைய பொய்ப் புகார்களை கூறி வருகிறார். கொள்முதல் நிலையத்தில் இருந்து நெல்லை எடுத்துச் செல்ல போதிய லாரிகள் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருக்கிறார்.

இந்த காட்டூர் நெல் கொள்முதல் நிலையம் சென்ற மாதம் 18-ஆம் தேதி திறக்கப்பட்டது. நேற்றைய தினம் வரை, இந்த நிலையத்தில் 20 ஆயிரம் நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. அதில், 16 ஆயிரம் நெல் மூட்டைகள், லாரிகள் மூலம், குடோனுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

### அம்பலமான உண்மை!

இங்கே நெல் மூட்டைகள் மழையில் நனைந்து முளைத்துவிட்டது என்ற ஒரு நாடகத்தையும் எதிர்க்கட்சித்தலைவர் அரங்கேற்ற முயன்றார். இதை ஒரு பெண்மணி தன்னிடம் கூறியதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். அதை நாங்கள் கேள்விப்பட்ட உடனே மாவட்ட ஆட்சியரைத் தொடர்பு கொண்டு பேசி ஆராய சொன்னோம். ஆட்சியர் அவர்கள், சம்பந்தப்பட்ட பெண்மணியின் ஊரான வரவுக்கோட்டைக்கு அதிகாரிகளை அனுப்பி உடனே ஆய்வு செய்தார்.

அந்த ஆய்வில், அந்தப் பெண்மணி 5 ஏக்கர் குத்தகை நிலத்தில் நடவு செய்துள்ளது தெரிய வந்தது. அவரது வயலில், இன்று மதியம் வரை, எந்த அறுவடையும் நடைபெறவில்லை. அறுவடையே நடைபெறாத

வயலில் இருந்து, அவர் எப்படி நெல் மூட்டைகளை கொள்முதல் மையத்துக்குக் கொண்டு சென்றார்? எந்த நெல் மூட்டைகள் எப்படி முளைத்தன என்பதெல்லாம் அவருக்கே வெளிச்சம். ஆகவே, அந்த பெண்ணும் எதிர்க்கட்சித் தலைவரும் கூறிய புகார் முற்றிலும் பொய்யானது என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

### எடப்பாடி பொய்ப்புகார்!

``ரேசன் கடைகளின் மூலம் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்க, ஒன்றிய அரசு அனுமதி வழங்கிவிட்டது. ஆனால், நம்முடைய அரசு அந்த அரிசியை வழங்கவில்லை” என்ற இன்னொரு புகாரையும் இங்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சொல்லி உள்ளார். இந்த செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்க ஒன்றிய அரசு, கடந்த ஜூலை மாதம் இறுதியில்தான் ஒரு வழிகாட்டுதலை வழங்கியது. வழிகாட்டுதல் வேறு, ஒப்புதல் வேறு,, என்பதை எதிர்க்கட்சித்தலைவர் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த வழிகாட்டுதலின்படி, செறிவூட்டப்பட்ட அரிசியைக் கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஒப்பந்தம் விடப்பட்டது. அதில், தேர்ந்தெடுக்கப்பட்ட 5 ஒப்பந்ததாரர்களின், செறிவூட்டப்பட்ட அரிசி மாதிரிகளின் தர பரிசோதனை விவரங்களை, ஒன்றிய அரசுக்கு, நம்முடைய அரசு அனுப்பி இருக்கிறது. ஆனால், ஒன்றிய அரசு இதுவரை அதற்கு அனுமதி தரவில்லை. ஏற்கெனவே விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ஈரப்பதத்தை 17-இல் சதவிகிதத்தில் இருந்து 22 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையையும் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு வைத்துள்ளது. அதுதொடர்பாக இன்றுதான் ஒன்றிய அரசு 3 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது. எனவே இதையெல்லாம் மறைத்து, ஒன்றிய பா.ஜ.க. அரசை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்பதற்காக எடப்பாடி பழனிசாமி இப்படி பொய்ப்புகார்களை அடுக்கியுள்ளார்.

### மக்கள் நம்பத்தயாரில்லை!

டெல்டாவில் ஆண்டுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நடைபெற்ற குறுவை சாகுபடி, நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, இன்றைக்கு 6 லட்சத்து 13 ஆயிரம் ஹெக்டேர் அளவுக்கு உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு குறுவை சாகுபடி நேரத்தில், தஞ்சை மாவட்டத்தில், ஒரு லட்சத்து 21 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு இரண்டரை லட்சம் மெட்ரிக் டன் அளவு, நெல் கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் ஒதுக்கியது, நெல்லுக்கான ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்கியது என நம்முடைய அரசு பல்வேறு திட்டங்களைத் தந்ததால், இன்றைக்கு தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவிகித பங்களிப்பை வேளாண்துறை கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாமல், எடப்பாடி பழனிசாமி நெல் மூட்டைகள் பற்றியும் கொள்முதல் பற்றியும் பல பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டிருக்கிறார். அதை மக்களோ, விவசாயிகளோ நம்பத்தயராக இல்லை.

பொய்யை விதைத்து, விவசாயிகளின் வாக்குகளை, அறுவடை செய்யலாம் என்று, எடப்பாடி பழனிசாமி திட்டமிடுகிறார். அவரது எண்ணம், தஞ்சை மண்ணில், ஒரு போதும் நடக்காது. ஏனென்றால், தமிழ்நாட்டில் நடப்பது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் டெல்டாக்காரரின் அரசு என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள். இந்த அரசு விவசாயிகளுக்கு என்றைக்கும் துணைநிற்கும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

**“ நம்முடைய அரசு பல்வேறு திட்டங்களைத் தந்ததால், இன்றைக்கு தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவிகித பங்களிப்பை வேளாண்துறை கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாமல், எடப்பாடி பழனிசாமி நெல் மூட்டைகள் பற்றியும் கொள்முதல் பற்றியும் பல பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டிருக்கிறார். அதை மக்களோ, விவசாயிகளோ நம்பத்தயராக இல்லை. “**